### முதல்வர் மு.க.ஸ்டாலினின் முத்திரைத் திட்டம்! தமிழ்நாடு முழுவதும் பெற்றோர் – குழந்தைகளிடையே

# மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ள ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’!

## அரசு உதவிபெறும் நகர்ப்புற தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம்!
## சென்னை மாநகரப் பெண்களிடமும் பெருத்த வரவேற்பு!

**சென்னை, ஆக.27-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முத்திரைத் திட்டங்களில் ஒன்றாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதிலும் தொடக்கப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். நேற்று (26.8.2025) முதல் நகர்ப் புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளார்கள். இத்திட்டம் பெண்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பெண்களில் சிலர் தம்முடைய மகிழ்ச்சியைப் பதிவு செய்து காலை உணவுத் திட்டத்தை வரவேற்றுள்ளார்கள்.**

**சென்னை சாந்தோம் பகுதியைச் சேர்ந்த திருமதி கேத்ரின்**

“தினமும் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் காலை வேளையில் பரபரப்பாக சமையலில் ஈடுபடுகிறேன். காலை உணவு, மதிய உணவு இரண்டையும் தயாரித்து பள்ளிக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிகளில் அறிமுகப்படுத்தியுள்ள காலை உணவுத் திட்டத்தை சென்னையிலும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளிலும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இத்திட்டம் என்னைப் பொறுத்தவரை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. என்னைப் போல குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் மற்ற தாய்மார்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள். காலையில் பள்ளிக்குப் புறப்படும்போது, என் பெண் குழந்தை சாப்பிடாமலே சென்று விடுவாள். அது எனக்கு மனக் கவலையையும் மன உளைச்சலையும் தரும். தற்போது இந்தத் திட்டத்தால் பள்ளிக்கு பசியோடு செல்லும் என் மகள், அங்கு மற்ற குழந்தைகளுடன் அமர்ந்து சூடாகச் சாப்பிட்டு வருகிறாள். இது என் கவலையைத் தீர்ப்பதுடன் என் மகள் பள்ளிப் பாடத்திலும் முழு கவனத்துடன் செலுத்துகிறாள். விளையாட்டுகளிலும் ஆர்வத்துடன் ஈடுபடுகிறாள். இதைக் காணும்போது பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காலை உணவுத் திட்டத்தை மனசார வரவேற்கிறேன்.



முதலமைச்சர் அவர்களுக்கு குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

**திருமதி ஜூலி :** சாந்தோம் பகுதியைச் சேர்ந்த மற்றொரு தாய். என் குழந்தை காலையில் பள்ளிக்குச் செல்வதற்கு முன் சாப்பிட மாட்டேன் என்று அடம்பிடிப்பாள். நான் கெஞ்சி கெஞ்சி ஊட்டினாலும் அவள் சாப்பிட மாட்டாள். நேரமாகிவிட்டது பள்ளிக்கு கிளம்பு என என் கணவர் அவசரப்படுத்துவார். இது எனக்கு பெரிய கவலையை ஏற்படுத்துவதாக நாள்தோறும் அமைந்திருந்தது. தற்போது, என் குழந்தை பள்ளியில் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிட்டு மகிழ்ச்சியோடு பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்ததும், காலையில் கேசரி சாப்பிட்டேன், இட்லி சாப்பிட்டேன், பொங்கல் சாப்பிட்டேன் எனக் கூறுவதை கேட்டு எனக்கு மகிழ்ச்சி தாங்க முடிவதில்லை. இதற்காக, தமிழ்நாடு அரசிற்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**திருமதி சாந்தோம் சத்யா :** எங்கள் வீட்டில் என் மகனை பள்ளிக்கு அனுப்புவதில் தினமும் பிரச்சினைதான், என் பொறுமையைச் சோதிப்பது போல், சாப்பிடுவதில் அவன் அடம்பிடிக்கிறான். எவ்வளவுதான் சொன்னாலும் அவன் கேட்பதில்லை. எனக்கு கோபம் வரும். சாப்பிடவில்லை என்றால் அடிப்பேன் என்று கையை ஓங்குவேன். என்னை உதறித் தள்ளிவிட்டு ஓடிவிடுவான். அவனுடைய அப்பா கையில் தட்டை எடுத்துக்கொண்டு, அவன் பின்னாலேயே போய், இந்தா ஒரு வாய், ஒரு வாய் என்று கெஞ்சுவார். ஒரு வாய் வாங்குவான் அவ்வளவுதான், உதட்டை பிதுக்கிவிட்டு, வேண்டாம் என்று ஓடிவிடுவான். நேரம் ஆகிவிடுவதால், பசியோடு அவனை பள்ளிக்கு அனுப்பவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது ஆறாத மனவேதனையை தினம் தந்து கொண்டிருந்தது. தற்போது நான் பள்ளியில் சாப்பிட்டுக் கொள்கிறேன் என்று புறப்பட்டு விடுகிறான்.

பள்ளியில் காலை உணவுத் திட்டம் குழந்தையினுடைய ஆர்வத்தை வளர்க்கிறது. எங்களுடைய மனக்கவலையைப் போக்குகிறது. இந்தத் திட்டம் தந்த முதலமைச்சர் அவர்களை வாயார, மனசார வாழ்த்துகிறோம். இந்த அரசுக்கு எங்களுடைய பாராட்டுகள் என்று கூறினார் திருமதி சத்யா.

இவர்களைப்போல, குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் ஒவ்வொரு பெற்றோரும் காலை உணவுத் திட்டம் தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பெருமிதத்தோடு பாராட்டுகிறார்கள்.

---

### முதல்வரின் காலை உணவுத் திட்டம்

# புது வரலாறு படைக்கட்டும்! நம் மாணவர்களின் கல்வி செழிக்கட்டும்!

## ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ விரிவாக்க விழாவில் –
## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

**சென்னை, ஆக.27-**

**சென்னை, மயிலாப்பூரில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத் தொடக்க விழா, நேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார்.**

**அப்போது அவர், ``தமிழ்நாட்டுக்கும் பஞ்சாப்புக்கும் இடையிலான பிணைப்பு நீண்ட நெடியது, தொடர்ந்து வலுவடைந்தும் வருகிறது” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் துணை முதல்வர் அவர்கள் தமது உரையில், ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இன்றைக்குப் புது வரலாறு படைக்கட்டும்! நம் மாணவர்களின் கல்வி செழிக்கட்டும்!’ என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

தமிழ்நாட்டிற்கும் பஞ்சாபிற்கும் இடையிலான பிணைப்பு, நீண்ட நெடியது, தொடர்ந்து வலுவடைந்தும் வருகிறது. 1969ஆம் ஆண்டு முதல்முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபோது, அவர் பஞ்சாபில் உள்ள லூதியானாவிற்குச் சென்றார். அங்கு பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளை கவனித்தவர், அதன் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, 1971ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

இன்று, பஞ்சாபின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. பகவந்த் மான் அவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்து வருகிறார்.

**கல்வியுடன் காலை உணவு**

கல்வி மட்டுமல்ல, கல்வியுடன் காலை உணவு, கல்விக்கு உதவித்தொகை என்று நம் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகின்ற சாதனைத் திட்டங்களை இன்றைக்கு ஒட்டுமொத்த நாடும் பாராட்டிக்கொண்டு இருக்கிறது. நம் திட்டங்களை பிற மாநிலங்கள் பாராட்டுவது மட்டுமல்ல, அவற்றைப் பின்பற்றியும் வருகின்றன. குறிப்பாக, இந்த காலை உணவுத் திட்டத்தை இந்தியா மட்டுமல்ல, வெளிநாடுகள்கூட சில இன்றைக்கு பின்பற்ற ஆரம்பித்து இருக்கின்றன.

**23 லட்சம் மாணவர்கள்**

2022ஆம் ஆண்டு, சுமார் 1,500 பள்ளிகளில் இத்திட்டத்தை, சோதனைத் திட்டமாகத் தொடங்கினோம். இப்போது, தமிழ்நாடு முழுவதும் 37 ஆயிரத்து 416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு, சுமார் 21 லட்சம் மாணவர்களுக்கு பயனளிக்கும் திட்டமாக வளர்ந்துள்ளது.




இங்கு மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும், ஆசிரியர்களும் அதிக அளவில் வந்துள்ளீர்கள். காலையில் எழுந்து சமைத்து, குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவது பதற்றமாகவும், பரபரப்பாகவும் இருக்கும். ஆனால், அந்த நிலைமையைத் தலைகீழாக மாற்றி இருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

குழந்தைகள் பள்ளியிலேயே காலை உணவு சாப்பிட்டுவிட்டு, பாடத்தை கவனிக்க வைத்து இருக்கிறார், நம் முதலமைச்சர் அவர்கள்.

இது வெறும் வயிற்றுப் பசியைப் போக்குகின்ற திட்டம் மட்டுமல்ல, இது மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்குவதற்கான மகத்தான திட்டம்.

நமது முதலமைச்சர் அடிக்கடி கூறுவது, சமூகத்திற்கு சுகாதாரமும் கல்வியும் வழங்குவது, மக்களைத் தங்களுக்கு தாங்களே உதவிக்கொள்ளவும், மேன்மையான குடிமக்களாக உருவாகவும் உதவுகிறது. எனவே, இந்த காலை உணவுத் திட்டம், நமது மாணவர்களை இச்சமூகத்தில் வெற்றிகரமான தனிமனிதர்களாக உருவாக்கும் திறனை மேலும் வலுப்படுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**ஒரு கோரிக்கை**

இங்கு இருக்கின்ற ஆசிரியர்களுக்கு மட்டும் ஒரு கோரிக்கை. மாணவர்களைப் படிக்க மட்டும் சொல்லாமல், விளையாட்டு நேரங்களில் விளையாட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால், மாணவர்களின் உடல்நலம் நன்றாக இருந்தால்தான், அவர்களின் மனநலமும் நன்றாக இருக்கும். காலை உணவுத் திட்டத்தை மாணவர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கு அதிக அளவில் வந்துள்ள நம் மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளின் உழைப்பு, இந்தத் திட்டத்தின் வெற்றியில் மிகமிக முக்கியமானது. காலை உணவை, தாய்மை உணர்வுடன் சமைத்துத் தருகின்ற சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த என் அருமை சகோதரிகள் அத்தனைப் பேருக்கும் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரோக்கியமான காலை உணவை வழங்குவதன் மூலம், நாம் ஊட்டச்சத்துக் குறைபாட்டை மட்டுமல்லாமல், பள்ளி வருகையை, கவனிக்கும் ஆற்றலை மற்றும் ஒட்டுமொத்த கல்வித் திறனையும் மேம்படுத்துகிறோம்.

**சமமான வாய்ப்புகள்**

இந்தத் திட்டம், பின்தங்கிய மற்றும் மேல்தட்டு மாணவர்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகித்து, ஒவ்வொரு குழந்தைக்கும் வெற்றி பெறுவதற்கு, சமமான வாய்ப்புகளை உறுதி செய்கிறது. இந்தத் திட்டத்தை பெரும் முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படுத்த உறுதுணையாக இருந்த குழுவினருக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சிறப்புக்குரிய திட்டத்தைத் தொடங்கி வைக்க, வந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். பஞ்சாப் முதலமைச்சர் பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களையும், அவரின் மனைவி குருப்ரீத் கவுர் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, கீதா ஜீவன், ராஜ கண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, தமிழச்சி தங்கபாண்டியன் உள்ளிட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். அண்ணன் முத்தரசன் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மயிலை த.வேலு உட்பட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா ராஜன் அவர்களையும், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அத்தனை பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்தொகையின் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் அவர்களையும், அனைத்து அதிகாரிகள், பணியாளர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் மருத்துவர் சௌமியா சாமிநாதன் அவர்களையும் வரவேற்று மகிழ்கிறேன்.

இங்கு வருகை தந்துள்ள ஆசிரியர் பெருமக்கள், ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணன் வசீகரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் அத்தனைபேரையும் வருக, வருக என வரவேற்கிறேன். அன்புக்குரிய மாணவச்செல்வங்களையும், தலைமை ஆசிரியர் ரெஜினா மற்றும் வந்திருக்கின்ற பெற்றோர்கள், சுயஉதவிக்குழு சகோதரிகள் உட்பட அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.



முதலமைச்சரின் காலை உணவு திட்டம் இன்றைக்கு புது வரலாறு படைக்கட்டும். நம் மாணவர்களின் கல்வி செழிக்கட்டும்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் பேசினார்.

---

## இளைஞர் அணிப் பொறுப்புகளுக்கு இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல்!







திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருப்பத்தூர், ஈரோடு மாவட்டங்களில் நேற்று (26.08.2025) காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு, விண்ணப்பித்திருந்த வர்களை மாநில துணைச் செயலாளர்கள் ப. அப்துல் மாலிக், பி.எஸ். சீனிவாசன், பிரபு கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். நேர்காணல் செய்தார். மேலும் அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்து, கொண்டுவந்திருந்த புகைப்படத் தொகுப்பு மினிட் புத்தகம் ஆகியவற்றை ஆய்வு செய்து, பணி சிறக்க வாழ்த்தினார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரம் அடங்கிய அறிவிப்பு விரைவில் முரசொலியில் வெளியாகவுள்ளது.